18.9..2019

அசல் வழக்கு எண்: 24/2011

வா.சா.3 காசி சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி குறுக்கு விசாரணை

நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க சம்மன் எதுவும் வந்ததா என்றால் மனைவிக்காக நான் சாட்சியம் அளிக்கிறேன். வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி சிவரக்கோட்டையைச் சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். என் மனைவி பெயரில் மற்ற சொத்துக்கள் உள்ளதா என்றால் எல்லா சொத்துக்களும் என் மனைவி பெயரில் உள்ளது. என் மனைவி பெயரில் உள்ள சொத்துக்கள் அனைத்தும் பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். என் மனைவி நாராயணன் என்பவருக்கு கிரையம் கொடுத்துள்ளார். நான் 5ம் வகுப்பு வரை படித்துள்ளேன் தமிழ் படிக்கத் தெரியாது. வா.சா,ஆ.2 ஆவணத்தில் சொத்து விவரத்தில் கிழக்கு நான்கு மாலாக குறிப்பிடப்பட்டுள்ள அழகு ஆசாரி யாரிடம் இருந்து கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. வா.சா.ஆ.4 ஆவணத்தில் கண்ட சொத்தை என் தாயார் சுப்பம்மாள் யாரிடம் கிரையம் பெற்றார் என்ற விபரம் எனக்குத் தெரியாது. வா.சா,ஆ.4 ஆவணத்தில் கிழக்கு மேற்கு நான்கு மாலில் குறிப்பிட்டுள்ள சிவராம சுந்தரம் பிள்ளை யார் என்று எனக்குத் தெரியாது. வா.சா,ஆ.5 ஆவணத்தில் கண்ட சொத்து விபரத்தில் கிழக்கு நான்கு மாலாக சிவராம சுந்தரம் பிள்ளை என குறிப்பிடப்பட்டுள்ளது பற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதியின் பாட்டனார் அழகிரி கவுண்டர் பற்றி எனக்குத் தெரியாது. அழகிரி கவுண்டர் மகன் குருசாமி கவுண்டரையும் எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதி எனக்கு உறவினரா என்றால் தூரத்து சொந்தம். தகப்பன் மற்றும் தாய் வழி சொந்தமா என்றால் இல்லை சமயன் ஆசாரி என்பவரை எனக்குத் தெரியாது. 2முதல் 4 வாதிகள் சமயன் ஆசாரியின் உறவினர்கள் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நான் திருமங்கலத்திற்கு வந்து 20 வருடங்கள் ஆகிறது. சிவரக்கோட்டை கிராமத்திற்கு நல்லது கெட்டதுக்கு செல்வேனா என்றால் செல்வேன். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் ராமசாமி கவுண்டரும் அவரது சகோதரர் அழகிரி கவுண்டரும் சமயன் ஆசாரிகது 3 3-4 செண்டை பொறுத்து வா.சா.ஆ.6 கிரைய ஆவணம் எழுதிகொடுத்துள்ளனரா என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மேற்படி 3 3-4 செண்டை தான் சமயன் ஆசாரி உறவினர்களான 2முதல் 4 வாதிகள் அனுபவம் செய்கின்றனர் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. மு.வ.எண்.509-2011ல் கண்ட தாவா சொத்து தான் வா.சா.ஆ.6

ஆவணத்தில் மேற்கு நான்கு மாலாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட மு.வ.எண் 509-11 ல் கண்ட சொத்தை என் மனைவி 1ம் வாதிக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. வா.சா,ஆ.2 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நான்குமாலுக்கு விரோதமாக வா.சா.ஆ.4,5 ஆவணங்களில் நான்குமால் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. என் மனைவி 1ம் வாதிக்கு எழுதிகொடுத்த கிரைய ஆவணத்தில் உள்ள விபரங்களை ஆவணங்களின் அடிப்படையில் குறிக்கப்பட்டது. வா.சா,ஆ.4,5 ஆவணங்களில் குறிபிடப்பட்டுள்ள விபரங்கள் வா.சா.ஆ.2 ஆவணத்தில் விடுபட்டுள்ளது என்றால் சரியல்ல. என் மனைவி கிரையம் பெற்ற சொத்திற்கு அவரது பெயரில் பட்டா ஏற்படவில்லை. மனைவியிடமிருந்து கிரையம் பெற்ற நபர்களுக்கு பட்டா ஏற்பட்டது. என் தாயார் பெயருக்கு பட்டா ஏற்பட்டிருந்ததா என்றால் அதனை நான் பார்க்கவேண்டும். ச.எண் 217-3ன் மொத்த விஸ்தீரணம் என்கதுத் தெரியாது. ச.எண்.217-3 நில உடமை பதிவேடு மேம்பாட்டு திட்டதிற்கு முன்பு உட்பிரிவு செய்யப்பட்டதா அல்லது பின்பு உட்பிரிவு செய்யப்பட்டதா என்று எனக்குத் தெரியாது. தாவா சொத்திற்கு வடபுறம் வண்டிப் பாதையாக இருந்து தற்போது சாலை அமைக்கப் பட்டுள்ளது என்றால் சரிதான். ஆஜர் பட்டாதாரர் தான் கிரையம் செய்து கொடுக்க முடியும் என்றால் சரியல்ல. வா.சா,ஆ.4 மற்றும் 5 ஆவணங்கள் எழுதி கொடுத்த நபர்கள் பெயரில் பட்டா கிடையாது என்றும் அதன் அடிப்படையில் எழுதப்பட்ட வா.சா,ஆ.2 ஆவணம் செல்லாது என்றால் சரியல்ல. ச.எண் 217-3ல் கண்ட 37 செண்டில் மையம் 10 செண்டு 1ம் பிரதிவாதியின் பாட்டனார் அழகிரி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல மேற்படி 10 செண்டினை அழகிரி கவுண்டர் 15.12.1887ம் ஆண்டு பதிவு செய்யப்பட்ட ஆவணம் மூலமாக கிரையம் பெற்றுள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ரயத்து வாரி வகைபாடு பற்றி 1908க்கு முன்பு இல்லாததால் 15.12.1887 கிரைய ஆவணத்தில் சர்வே எண் குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி எனக்குத் தெரியாது. 15.12.1887 கிரைய ஆவணத்தின் படி கிரையம் பெற்ற 10 செண்டு நிலத்தில் 3 3-4 செண்டு நிலத்தை சமயன் ஆசாரிக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. நிலஉடமை பதிவு மேம்பாட்டு திட்டத்திற்கு முன்பு என் மனைவி பெயரிலோ அவர் உறவினருக்கோ பட்டா ஏற்படவில்லை என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து 1ம் பிரதிவாதிக்கு வழி முறையில் பாத்தியப்பட்டு அவர் அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி பணியின் காரணமாக வெவ்வேறு ஊர்களில்

பணியாற்றியதை பயன்படுத்தி வருவாய் துறையினரின் உதவியுடன் வாதிகள் பெயரில் பட்டா மாறுதல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்தை பொறுத்து ஏற்பட்ட வில்லங்கங்களை நிவர்த்தி செய்ய என்னையும் வாதிகளிடமும் கேட்டதில் நிவர்த்தி செய்வதாக கூறி பின்னர் மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. என் மனைவி எழுதிக் கொடுத்த தவறான ஆவணத்தை ஊர்ஜிதம் செய்யும் வகையில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை- இல்லை